1974 சனவரி 23]

*98 வினா—திரு. கோ. இளங்கோவன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

பூதலூர் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்கும் செங்கிப்பட்டி மருந்தகத்தை அரசின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தற்போது இல்லை.*

பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்கள்

*99 வினா—திரு. என். கிட்டப்பா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 1972-73 ஆம் ஆண்டில் எந்தெந்த நகராட்சி மன்றங்கள் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கோரியுள்ளன ?

(இ) எந்தெந்த நகராட்சி மன்றங்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *(அ) & (இ) 8 நகராட்சி மன்றங்கள் 1972-73 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கேட்டன. அரசு இந்த 8 நகராட்சி மன்றங்களுக்கும் 1972-73 ஆம் ஆண்டிற்கு கடன் தொகை வழங்கியுள்ளது. நகராட்சி மன்றங்களின் பெயர்களும் கடன் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—*

	ரூபாய்.
1. பெரியகுளம்	1,85,000
2. மன்னார்குடி	17,800
3. திருநெல்வேலி	10,84,000
4. கும்பகோணம்	1,30,600
5. காஞ்சீபுரம்	6,61,000
6. கோயம்புத்தூர்	3,62,000
7. திருச்சி	6,87,000
8. திருவொற்றியூர்	3,51,000